# தொண்டுள்ளத்துடன் பணியாற்ற டாக்டர்களுக்கு அழைப்பு

தஞ்சாவூர், அக்.4-

தொண்டுக்காக உருவான கல்வி மருத்துவக் கல்வி. எனவே தொண்டு உள்ளத்துடன் டாக்டர்கள் பணியாற்ற வேண்டும் என்று மத்திய அமைச்சர் பழனிமாணிக்கம் கூறினார்.

தேசிய ஊரக நலத் திட்டம் சார்பில் அம்மாபேட்டை ரெஜினாசேலி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுகாதாரத் திருவிழா நடந்தது.

சுகாதாரப் பணிகள் துணை இயக்குனர் மதிவாணன் வரவேற்றார். கலெக்டர் சண்முகம் முன்னிலை வகித்தார். மத்திய அமைச்சர் பழனிமாணிக்கம் தலைமை வகித்தார்.

பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த அனைத்து மருத்துவப் பணிகளையும், சிகிச்சைக்கு வந்திருந்த நோயாளிகள் நலன் குறித்தும் மத்திய அமைச்சர் கேட்டறிந்தார்.

பின்னர் அவர் பேசியதாவது:

நோய் இருப்பது குறித்து தெரிந்த பின்னர் முறையான சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். நோய் இருப்பது தெரிந்தவுடன் மன ரீதியாக பாதிக்கப்படுவார்கள்.

நோய் கடுமையாக இருக்கும் போது ஏழை, எளிய மக்கள் சிகிச்சை பெற முடியாமல் இருந்து வந்தனர். அவர்களுக்காகவே இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் முதல்வர் கருணாநிதி 'சுகாதாரத் திருவிழா' என்ற ஒன்றை மாநிலம் முழுவதும் நடத்தி வருகிறார்.



அம்மாபேட்டையில் நடந்த சுகாதாரத் திருவிழாவில் மூதாட்டியை டாக்டர் பரிசோதனை செய்கிறார். அருகில் மத்திய அமைச்சர் பழனிமாணிக்கம், கலெக்டர் சண்முகம், மாவட்ட பஞ். தலைவர் செல்வி, ஒன்றியக்குழு துணைத் தலைவர் தியாக சுரேஷ், தொலைதொடர்புத்துறை ஆலோசனைக்குழு உறுப்பினர் செந்தமிழ்ச்செல்வன் மற்றும் பலர்.

இதுபோன்ற இடத்தில் அனைத்து நோய்களுக்குமான டாக்டர்கள் வரவழைக்கப்பட்டு பரிசோதனை செய்யப்படும்.

நோய் குறித்த முழு விவரங்கள் பெற்றவுடன் மேல் சிகிச்சைக்கு நோயாளிகள் பரிந்துரை செய்யப்படுவர். சிலருக்கு இங்கேயே வைக்கப்பட்டுள்ள தரமான மருந்து, மாத்திரைகள் வழங்கப்படும்.

அம்மாபேட்டை சுகாதார விழாவை தொடங்கி வைக்க நான் வந்த போது, இங்கு சிகிச்சை பெறுவதற்காக புவனேஸ்வரி என்ற மாணவி வந்திருந்தார். அவரை பரிசோதனை செய்த டாக்டர்கள் இதய நோய் இருப்பதாக தெரிவித்தனர்.

சுகாதாரத் திருவிழாவில் அவருக்கு தேவையான அனைத்து வகை பரிசோதனையும் செய்யப்பட்டு, மாணவி புவனேஸ்வரி மேல்சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

இதுபோன்று உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க இதுபோன்ற சுகாதார விழாவை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மாவட்டத்தில் இதுவரை 6 சுகாதாரத் திருவிழா நடத்தப்பட்டுள்ளது. இதில் 30 ஆயிரம் பேர் பயன் அடைந்துள்ளனர்.

விளம்பரம் மட்டும் ஒரு திட்டத்தை வெற்றி பெற செய்யாது. மிகுந்த ஈடுபாட்டுடன் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும்.

தொண்டுக்கான உருவான கல்வி மருத்துவம், எனவே இந்த கல்வி கற்ற டாக்டர்கள் தொண்டு உள்ளத்துடன் பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு மத்திய அமைச்சர் பழனிமாணிக்கம் பேசினார்.

மாவட்ட பஞ்.தலைவர் செல்வி, முன்னாள் எம்.எல்.ஏ., ஏனாதி பாலசுப்பிரமணியன், அம்மாபேட்டை பேரூராட்சி தலைவர் பாலச்சந்திரன், ஒன்றியக்குழு தலைவர் கலைமாண்பாட்சா, துணைத் தலைவர் தியாகசுரேஷ், தொலை தொடர்புத்துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் செந்தமிழ்செல்வன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். மருத்துவ அலுவலர் யாஸ்மின் நன்றி கூறினார்.

தஞ்சாவூ
நம்பமுடியாத
ரூ. 1 கோ
தஞ்சாவூர் பெ
கோல்டு பிளேட்டட்,
டைமண்ட், போல்கி
வாங்குவதற்கு 1
ரூ. 40
இடம்: வே